உ

# நமசிவாயம்

(ஆசிரியர்)

★

நினைவு மலர்

1997

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# நமசிவாயம்

(ஆசிரியர்)

★

## நினைவு மலர்

1997

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# அமரர் ஆ. நமசிவாயம் அவர்கள்

தோற்றம் : 1922 – 08 – 02

மறைவு : 1997 – 08 – 26

## திதி வெண்பா

ஈசுரவாண் டாவணியி லேயுங் கரும்பக்கத்(து)
ஆசில் நவமி அஉமநாளே — காசினியை
விட்டகன்று வேள்நமசி வாயம் விகிர்தூர்க் காட்
பட்ட தினமாய்ப் பகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரரின் வரலாற்றுக் குறிப்பு

''கரவை'' எட்டிக்காய் போல எட்டி உதைக்கும் கரவெட்டியில், அத்துளு அன்னையின் ஆலயமணி கேட்டுத் துயிலெழும் மருத நிலச் சூழ்நிலையில் அமைந்துள்ளது பள்ளந்தோட்டம். அத்திருநிலத்திலே நாகப்பர் ஆழ்வார் அவர்களுக்கும், சின்னன் அம்மையாருக்கும் தவமகனாக 02-08-22 ல் வந்தவதரித்தவர் அமரர் நமசிவாயம் அவர்கள்.

அமரர் தனது ஆரம்பக் கல்வியை கரவெட்டி றோமன் கத்தோலிக்கப் பாடசாலையில் தொடங்கி பின் திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயம், கட்டைவேலி ஞானாசாரியர்க் கல்லூரி ஆகியவற்றில் பயின்று சித்தியெய்தினார்.

ஆசிரியப் பயிற்சியை சாவகச்சேரி ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையில் முடித்து தனது நிரந்தர ஆசிரியப் பணியை யார்க்கரு விநாயக வித்தியாசாலையில் ஆரம்பித்ததோடு தனது ஓய்வு பெறுங் காலப் பாடசாலையாகவும் யார்க்கருவையே பெற்றிருந்தார். இடையில் பொன்னாலை H. B. E, யா/ ஆறுமுக வித்தியாலயம் சுழிபுரம், வ/தண்ணீரூற்று H. B. E, அல்வாய் தெற்கு H. B. E, மூதூர் புனித அந்தோனியார், மன்னார் சித்திவிநாயகர் ஆகிய பாடசாலைகளில் சேவையாற்றினார். எனினும் தனது சேவைக் காலத்தின் நீண்ட பகுதியை யார்க்கரு விநாயக வித்தியாசாலையில் செலவிட்டு நீண்ட நெடிய மாணவ பரம்பரை ஒன்றைத் தனதாக்கிக் கொண்டார்.

01-08-1980 ல் ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வுபெற்ற அமரர் சமூக சேவையில் தன்னை அர்ப்பணித்து சாதி, மத, பேதம் பாராத சமரச நோக்குள்ளவராகத் திகழ்ந்தார். இறைவழிபாட்டில் அமைதியும் கண்டார்.

சகோதரர் பலருடன் பிறந்த அமரர் இல்வாழ்வில் புகுந்து மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகள் என்று பல செல்வங்களைக் கண்டுகளித்தார். தந்தைக்குரிய கடமைகளைத் தவறாதுசெய்து கல்வி கேள்விகளில் வல்லவர்களாக்கினார். பேரப்பிள்ளைகளிடம் பாசத்தைப் பொழிந்தார். அவர்களைக் கண்டு இன்புற்றார். உற்றார், உறவினர், நண்பர்களை நேசித்தார்.

அன்னார் 26-08-97ல் தனது 75வது வயதில் பொய்யுடலம் நீத்து புகழுடலம் நிலைநிறுத்திச் சென்றுவிட்டார். அவரான்மா அரனடியை அடைய அவருடல் 27-08-97ல் அக்கினியுடன் சங்கமமாகியது.

''நெருநலுள னொருவன் இன்றில்லை என்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது குரு மயில்வாகனம் (நமசிவாயம்)

இப்பூவுலகில் பிறப்போர் எல்லோரும் இறப்பது திண்ணம். ஆயினும் அவர் தம் வாழ்நாளில் வாழும் தன்மையைப் பொறுத்து அவர் உடல் மறைந்தாலும் அவரது எச்சங்கள் மக்களிடம் இருந்து பிரிந்துவிடுவதில்லை.

எனது குருவாக இருந்த அன்னாரின் தோற்றம்; அவரது நடத்தை, மனித நேயம், தெய்வீகப் பண்பு போன்றவற்றால் அவரை எமது மனதில் இருந்து மறக்கமுடியவில்லை. நான் எனது ஆரம்பக் கல்வியை யா/ கட்டைவேலி யார்க்கரு விநாயகர் வித்தியாலயத்தில் கற்ற காலத்தில் அவரிடம் சில பண்புகளையும் அவரது ஆளுமையையும் காணக்கூடிய வாய்ப்புக் கிடைத்தது. அவர் வகுப்பில் கற்பிக்கும்போது மாணவர்கள் கற்றலில் ஆர்வமாக இருக்கும் நிலைக்கு மாணவர்களை வழிப்படுத்தும் ஆளுமையையும் மனப்பாங்கையும் அவரிடம் காணலாம். மாணவரை இனங்கண்டு அவர்களை வழிநடத்தும் பண்பும் அவரிடம் காணப்படும். அன்னாரிடத்தில் காணப்படும் இன்னொரு விடயம் எந்தப் பிரச்சினையையும் இலகுவாக எடுத்து அதைத் தீர்த்து வைக்கும் பண்பாகும். இதை இவரது பிற்காலத்திலும் காணக் கூடியதாக இருந்தது.

இவர் தனது ஆசிரியத் தொழிலில் இருந்து ஓய்வுபெற்றபின் அவரது சமூகத்தொண்டு, மனித நேயம், தெய்வீகப் பண்பு ஆகியவை அன்னாரை மக்கள் மனதிலிருந்து மறக்கமுடியாத அளவுக்கு வைத்துள்ளது. அன்னாருக்கு பகைவன் என்று யாருமே இருக்க மாட்டார்கள். அவ்வளவிற்கு நகைப்புடனும் அன்புடனும் பழகும் திறன் அவர்மேல் ஓர் அன்புத் தொடர்பை ஏற்படுத்திவிடும். யாருக்கும் பிரதிபயன் கருதாது உதவி செய்யும் அவரது மனப்பாங்கு, யாருக்கும் துன்பம் வந்தால் அதைப் போக்கும் அவரது மனிதநேயம் அவரை எவராலும் மறக்கமுடியாத அளவிற்கு வைத்துள்ளது. அவரது இப்பூவுலக வாழ்வில் அவர் சகல சிறப்புக்களுடனும் வாழ்வாங்கு வாழ்ந்து அதன் பயனாக தெய்வத்துள் வைக்கப்பட்டுள்ளார்.

"தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப் படும்"

திரு. வ கணபதிப்பிள்ளை

யா/கட்டைவேலி
யார்க்கரு விநாயகர் வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

அந்திய காலத்தில்
அமரர் குளக்கோட்டு விநாயகரை
ஆன்மா லாபத்தின் பொருட்டு பரவித்துதித்த

# பஞ்சமம்

வேதசிவ ஆகமங்க ளோதல் கேட்கும்
விழுமியபௌ ராணிகரின் படனங் கேட்கும்
ஆதரத்தோ டடியார்கள் பராவி யேத்தும்
அருட்பாக்க ளனுதினமு மினிதே கேட்கும்
ஏதமிலாக் குளக்கோட்டுப் பதியில் மேவி
எல்லோர்க்கும் இன்னருளை ஈயும் தாத்தா
பூதவுடல் நீத்தடியேன் வரும்போ துந்தன்
பொன்னடிக்கீழ்ப் பொலிவார யிருத்து வாயே.

மருப்பொன்றாற் கயமுகனை மாய்த்து வாயே
நாட்டாருக் கருள்செய்த கற்ப கக்கா
திருக்கிளரும் குளக்கோட்டுப் பதியில் மேவித்
திகளொளியாய் திருவுருவாய் திகழா நிற்பாய்
இருவினையேன் நின்னடியை யிறுகப் பற்றி
எந்நாளு மிறையன்போ டிருந்து நின்றேன்
கருவாகிப் பிறந்தினியான் கலங்கா வண்ணம்
கரிமுகத்துத் தூமணியே காத்துக் கொள்ளே.

துங்கமதம் பில்குமொரு தும்பித் தாத்தா
துன்பங்கள் துடைத்தின்பம் துய்க்க வைப்பாய்
செங்கமலக் குளத்தருகே கோயில் கொண்ட
சேவகனே! குளக்கோட்டுச் செம்ம லப்பா
உங்கையிற் பிள்ளையென உவந்து கூட்டி
யொழியாத பிரபஞ்சப் பற்றைப் போக்கித்
தங்கியநின் தலையன்பின் தன்மை யாலே
தமியேனை யாட்கொண்டு தாங்கு தேவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓங்காரம் ஓரிரண்டா யொருமை யெய்தும்
ஒப்பற்ற தத்துவத்தை யுமையாள் நோக்கப்
பாங்கான பிரணவத்தின் படிவ மாகப்
பாலனென வந்துதித்த பரனே யப்பா!
நீங்காத அறுவளமும் நிரம்பப் பெற்ற
நீடுபுகழ் குளக்கோட்டு நித்தா நீரே
ஈங்கெனது நானென்னுஞ் செருக்கை நீக்கி
இருமையிலு மினித்தமுட னிருந்து கோவே

எந்தைதிரு மேனியிலே யெல்லா மென்று
எடுத்தியம்பும் வேதவிதிப்படியே முன்னாள்
தந்தையினை வலம்வந்து பரிசு பெற்றோய்
தக்கோர்வாழ் குளக்கோட்டுப் பதியில் மேவி
முந்தைவினை மூட்டறுக்க வந்த முன்னோய்
முழுதுலகும் ஆள்வேனென் றெண்ணி யெண்ணிச்
சிந்தையிலே அகம்பாவம் சுமந்து நின்ற
சிறியேற்கும் நின்னருளை நல்கு வாயே.

— கைலை நடராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பொதுப் பணியிலொரு முழுமனிதன்'

''நடமாடக் கோயில் நம்பர்க் கொன்றீயில்
படமாடக் கோயில் பகவற் கதாமே''

என்ற திருமூலர் கருத்தில் நிலைத்து நின்று, பொது அமைப்புக் களின் உறுப்பினனாய், நல்லாசானாய் சோதிடனாய், வைத்தியனாய் என்று தன்னாலான எல்லா வழிகளிலும், உண்மைத் தொண்டாற்றி, இந்த சமூகத்தின் வரலாற்றோடு பேதமறக் கலந்துவிட்டவர், அமரர் ஆழ்வார் நமசிவாயம் அவர்கள். கற்ற கலைகள் எதையும் விலைக்கு விற்றுவிட நினைக்காமல் மற்றவர்க்கு நன்மைசெய்ய மட்டுமே பயன்படுத்தியவர் அவர். அன்னாரை ''பொதுப்பணியில் ஒரு முழுமனிதன்'' என்றாலது மிகையாக அமையாது. இந்த வகையிலே நாமகள் சனசமூக நிறைபத்திற் கூடாகவும் நிலையத்தின் ஆரம்ப காலந்தொடக்கம் அமரரின் இறுதிநாள் வரை காப்பாளர், உறுப்பினர் என்ற பல்வேறு நிலைகளிலிருந்தும் அளப்பரிய சேவையாற்றி, குன்றாத சமூகப் பிரேமையை தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வந்திருக்கிறார்.

அன்னாரின் பேருள்ளம் வெளிப்பட்ட சந்தர்ப்பங்கள் பலப் பல. "விளையாட்டுப் போட்டிக்கு எல்லாரும் ஒத்துழைக்க வேணும்'' என்றவுடன், ''ஏன் சுத்தி வளைக்கிறியள் வழக்கம் போல இந்த முறையும் அஞ்சப்பத்த தரத்தானே வேணும். மற்றபடி கிழடுகளால் தூக்கப்பறிக்கேலாது அதுகளை இளந்தாரியள் பாருங்கோ'' என்றவரிடம் திறந்த உள்ளத்திற்கு இலக்கணம் கண்டோம். ''எப்ப காசு சேர்க்கப் போவம்'' என்றதும் எப்ப தந்தாலும் ஒரே காசுதானே இப்பவே தந்தா மெல்லமெல்ல ஆயித்தப்படுத்தலாமெல்லே, இந்தா என்ர பங்குக்கு இருநூறு ரூபா, இருக்கிறவை இப்பவே குடுங்கோ. காசு சேர்க்கிறதையும் ஒரு வேலையாக்கக்கூடாது'' என்றவரிடம் நிறைந்த நெஞ்சத்திற்கும் பரந்த எண்ணத்திற்கும் இலக்கணம் கண்டோம். இப்படி எத்தனையெத்தனையோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னாரின் மறைவு அவர்தம் குடும்பத்தார்க்கும் இந்த சமூகத்திற்கும் ஈடுசெய்யமுடியாத பேரிழப்பு என்பது மாற்றில்லா உண்மையெனினும்,

''பலநூல் கற்ற பண்டிதர்கள் பலரும் சபையிற் பலகூடிப்
கலகம் வாதம் செய்திடுக; கண்டங்கிழிய முழங்கிடுக,
மலரும் மலர்கள் வாடலுமிவ் வாழ்வு நிலையா தோடலுமே,
உலகம் கண்ட உண்மைகளாம் உண்டோ மற்றொன்
றுரைத்திடவே''

என்பதை எண்ணி மனமாறி அமரரின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திப்போமாக.

சாந்தி சாந்தி சாந்தி!

நிர்வாகிகள்
நாமகள் சனசமூக நிலையம்

செட்டித் தெரு,
கட்டைவேலி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "உழுவலன்பின் உள்ளக் கசிவு"

நால்வகைத் தோற்றம், எழுவகைப் பிறப்பு, எண்பத்து நூறாயிரம் பிறவிகளுட் சிறந்தது மானிடப் பிறவி. இது அரிதினும் அரிது. மனதை உடையவன் மனிதன். ஆனால், உணர்வால் வேறுபட்டவர். மனிதனாய்ப் பிறந்து, மனிதனாய் வாழ்ந்து பிரிந்தவர் என் உள்ளத்தில் இடம்பிடித்த அமரர் மயில்வாகனம் என்று பலராலும் அழைக்கப்படும் நமசிவாயம் ஆசிரியர் அவர்கள். என் உடன் ஆசிரியராய், நண்பராய், சகோதரனாய், தந்தையாய் விளங்கி ஏறக்குறைய நாற்பது ஆண்டுகள் என்னுடன் உளங் கலந்து பழகியவர்.

உருவினுக்கேற்ற உள்ளம், தொழிலினுக்கேற்ற திறந்த மனப்பாங்கு; ''இடுக்கண் வருங்கால் நகுக'' என்பதற்கிணங்க எதுவரினும் இடையிடையே சிறுசிரிப்பு; மலையே வீழினும் கலங்காத திண்மை; நம்பிக்கைக்கு இருப்பிடம்; ஒப்புற ஒழுகும் ஓங்கிய திறமை இத்தனையும் அவருடன் பழகிய காலத்தில் நான் அவரிடம் கற்றுக்கொண்டவை. பேசப், பழக இனியவர். நளினமாகப் பேசி, மற்றவர்களை மகிழ்விப்பதில் சாதுரியம் படைத்தவர். இப்படிச் சொல்லிக்கொண்டே போகலாம். சொல்லில் அடங்காது.

கல்வியின் சிறப்பைத் தெரிந்தவராகையால், தன் பிள்ளைகளுக்கு முதுசொமாக கல்வியை ஊட்டி அதன் சிறப்பை அனுபவித்து மகிழ்ந்தவர். அவரின் பிரிவு குடும்பத்தில் ஈடுசெய்யமுடியாத பேரிழப்பு ஆகும்.

தோற்றம் பெற்ற எதுவும் மறைவது இயற்கை. இதனையே மரணம் என்பர். ஐம்பூத சேர்க்கையாலான கூட்டைவிட்டு ஆன்மாவான பறவை பறந்துவிட்டது. ஆன்மா அழிவற்றது. அழிவது உடம்பே. அமரர் என்றால் அழிவற்றவர் என்பது பொருள். அன்னமயகோசம், பிராணமயகோசம் ஆகிய இரண்டினாலும் இணைந்த அமரரின் தூல சரீரம் அழிந்தது. ஆனால், மனோமயகோசத்துடன் தொடர்பான சூக்கும தேகத்துடன் என்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழியாது நீடித்து வாழ்ந்து வினைப்போகம் முடிய ஆன்மா இறை பதம் அடையும். தந்தை, தாய், மனை, மக்கள், சுற்றம் என்ற சந்தையில் கூட்டத்தோடு இத்தனை காலமும் வாழ்ந்த அமரர் தன் கடமையை முடித்து இறைபதம் நாடி சொல்லாமலேயே பிரிந்து சென்றுவிட்டார்.

இவ்வுலகிலே வாழ்வாங்கு வாழ்ந்து எவருடனும் உயர்வு தாழ்வு கருதாது யாவர்க்கும் உதவிசெய்து புகழ்பூத்த அமரர் அவர்களின் ஆன்ம சாந்திக்கு இறைவனை வேண்டுகின்றேன்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கிழவி தோட்டம்,
கரவெட்டி கிழக்கு.

**சி. வேலாயுதம்**
(இளைப்பாறிய அதிபர்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# தோத்திரப் பாக்கள்

## திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரங்கள்

திருச்சிற்றம்பலம்

தோடுடைய செவியன்விடை யேறியோர் தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப்பொடி பூசியென் னுள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாள்பணிந் தேத்தவருள் செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மானிவ னன்றே.

அங்கமும் வேதமுமோது நாவ ரந்தணர்நாளு மடிபரவ
மங்குல் மதிதவழ் மாடவீதி மருகல் நிலாவியமைந்த சொல்லாய்
செங்கய லார்புனற் செல்வமல்கு சீர்கொள் செங்காட்டங் குடியதனுட்
கங்குல் விளங்கெரி யேந்தியாடுங் கணபதீஸ்சரங் காமுறவே.

உண்ணாமுலை யுமையாளொடு முடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன வருவித்திரள் மழலைம்முழ வதிரு
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ண மறுமே.

நன்றுடையானைத் தீயதிலானை நரைவெள்ளேறு
ஒன்றுடையானை யுமையொரு பாகமுடை யானைச்
சென்றடையாத திருவுடையானை சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறவென் னுள்ளங் குளிருமே.

## திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்

கூற்றாயின வாறுவிலக் ககிலீர் கொடுமை பலசெய்தன நானறியே
னேற்றா யடிக்கே யிரவும்பகலும் பிரியாது வணங்கு வெனப்பொழுதுந்
தோற்றா தென்வயிற்றின கம்படியே குடரோடு தொடக்கிமுடக்கியிட
ஆற்றே னடியே னதிகைக்கெடில வீராட்டானத்துறை யம்மானே.

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவதுநமச் சிவாயவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதர்ப்பிறைக் கண்ணியானை மலையான் மகளொடும்பாடிப்
போதொடு நீர்சுமந்தேத்திப் புகுவாரவர் பின்புகுவேன்
யாதுஞ்சுவடு படாம லையாறடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடுங் களிறுவருவன கண்டேன்
கண்டேன வர்திருப்பாதங் கண்டறியாதன கண்டேன்

பத்தனாய் பாடமாட்டேன் பரமனே பரமயோகி
யெத்தினாற் பத்திசெய்கே னென்னைநீ யிகழவேண்டாம்
முத்தனே முதல்வா தில்லையம்பலத் தாடுகின்ற
அத்தா வுன்னாடல் காண்பான டியனேன் வந்தவாறே.

## சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரங்கள்

பித்தா பிறைசூடி பெருமானே யருளாளா
வெத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூரருட்டுறையு
ளத்தா வுனக்காளாயினி யல்லேனென லாமே.

அந்தணாளனுன் னடைக்கலம்புகுந்த வவனைக்காப்பது காரணமாக
வந்தகாலன்ற னாருயிரதனை வவ்வினாய்க்குன்றன்
வன்மைகண்டடியேன்
எந்தைநீயெனை நமன்றமர்நலியி லிவன்மற்றென்னடி
யாரெனவிலக்குஞ்
சிந்தையால்வந்துன் றிருவடியடைந்தேன் செழும்பொழிற்றிருப்
புன்கூருளானே.

வாழ்வது மாயம் மிதுமண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய்செய்த பறிதான்
றாழதறஞ் செய்ம்மின் றடங்கண்ணான் மலரோனுங்
கீழ்மேலுற நின்றான் றிருக்கேதார மெனீரே.

மீளாவடிமை யுமக்கேயாளாய்ப் பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போலுள்ளே கனன்று முகத்தாண்மிகவாடி
யாளா யிருக்குமடியார் தங்களல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவாரூரீர் வாழ்ந்துபோதீரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

வேண்டத் தக்க தறிவோய் நீ
வேண்ட முழுதும் தருவோய்
வேண்டும் அவன் மாற் கரியோய் நீ
வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீ யாது அருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டி னல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வு சூழ் கடத்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள் மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம் பக்தர்கள்
வஞ்சகர் போ யகலப்
பொன்னின் செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனியெல் லாம் விளங்க
அன்னநடை மடவாளுமைகோ னடியேமுக்
கருள் புரிந்து
பின்னைப் பிற வியறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே.

## பெரிய புராணம்

ஐந்துபே ரறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணமொரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே யாக
இந்துவாழ் சடையான் ஆடுமா னந்த
எல்லையிற் தனிப்பெரும் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமந்திரம்

மண்ணகத் தான் ஒக்கும் வானகத் தான் ஒக்கும்
விண்ணகத் தான் ஒக்கும் வேதகத் தான் ஒக்கும்
பண்ணகத் தின்னிசை பாடலுற் றானுக்கே
கண்ணகத் தேநின்று காதலித் தேனே.

## திருப்புகழ்

திருமகளு லாவு மிருபுயமு ராரி
திருமருக நாமத் பெருமாள்காண்
செகதலமும் வானு மிகுதிபெறு பாடல்
தெரிதருகு மாரப் பெருமாள்காண்
மருவுமடி யார்கள் மனதில் விளையாடு
மரகதம யூரப் பெருமாள்காண்
மணிதரளம் வீசி யணியருவி சூழ
மருவுகதிர் காமப் பெருமாள்காண்
அருவரைகள் நீறு படஅசுரர் மாள
அமர்பொருத வீரப் பெருமாள்காண்
அருவுபிறை வாரி விரிவுசடை வேணி
அமலர்குரு நாதப் பெருமாள்காண்
இருவினை யிலாத தருவினைவி டாத
இமையவர்க்கு லேசப் பெருமாள்காண்
இலகு சிலை வேடர் கொடியினதி பார
இருதனவி நோதப் பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்
## திருச்செந்தூர்
# கந்தர் கலிவெண்பா

1. பூமேவு செங்கமலப் புத்தேளும் தேறரிய
பாமேவு தெய்வப் பழமறையும் — தேமேவு
2. நாதமும் நாதாந்த முடிவும் நவைதீர்ந்த
போதமும் காணாத போதமாய் - ஆதிநடு
3. அந்தம் கடந்தநித்தி யானந்த போதமாய்ப்
பந்தம் தணந்த பரஞ்சுடராய் — வந்த
4. குறியும் குணமுமொரு கோலமுமற்று எங்கும்
செறியும் பரம சிவமாய் — அறிவுக்கு
5. அனாதியாய் ஐந்தொழிற்கும் அப்புறமாய் அன்றே
மனாதிகளுக்கு எட்டா வடிவாய்த் — தனாதருளின்
6. பஞ்சவித ரூப பரசுகமாய் எவ்வுயிர்க்கும்
தஞ்ச மென நிற்கும் தனிப்பொருளாய் — எஞ்சாத
7. பூரணமாய் நித்தமாய்ப் போக்குவரவும் புணர்வும்
காரணமும் இல்லாக் கதியாகித் — தாரணியில்
8. இந்திரசாலம் புரிவோன் யாரையும் தான்மயக்கும்
தந்திரத்தில் சாராது சார்வதுபோல் — முந்தும்
9. கருவின்றி நின்ற கருவாய் அருளே
உருவின்றி நின்ற உருவாய்த் - திரிகரணம்
10. ஆகவரும் இச்சை அறிவு இயற்ற லால்இலய
போகஅதி காரப் பொருளாகி — ஏகத்து
11. உருவும் அருவும் உருஅருவும் ஆகிப்
உருவ வடிவம் பலவாய் — இருள்மலத்துள்
12. மோகமுறும் பல்லுயிர்க்கு முத்திஅளித் தற்குமல
பாகமுறவே கடைக்கண் பாலித்துத் — தேகமுறத்
13. தந்த அருவுருவம் சார்ந்தவிந்து மோகினிமான்
பெந்த முறவே பிணிப்பித்து — மந்த்ரமுதல்
14. ஆறத்து வாவும் அண்டத்து ஆர்ந்தஅத்து வாக்களும்முற்
கூறத் தகும் சிமிழ்ப்பில் கூட்டுவித்து — மாறிவரும்
15. ஈரிரண்டு தோற்றத்து எழுப்பிறப்புள் யோனிஎண்பான்
ஆரவந்த நான்குநூ றாயிரத்துள் — தீர்வரிய
16. கன்மத்துக்கு ஈடாய்க் கறங்கும் சகடமும்போற்
சென்மித்து உழலத் திரோதித்து — வெந்நிரய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. சொர்காதி போகமெலாம் துய்ப்பித்துப் பக்குவத்தால்
நற்காரணம் சிறிது நண்ணுதலும் — தர்க்கமிடும்

18. தொன்னூல் பரசமயம் தோறும் அதுவதுவே
நன்னூல் எனத்தெரிந்து நாட்டுவித்து — முன்னூல்

19. விரதமுத லாயபல மெய்தவத்தின் உண்மைச்
சரியைகிரி யாயோகம் சார்வித்து — அருள்பெருகு

20. சாலோக சாமீப சாரூபமும் புசிப்பித்து
ஆலோகம் தன் அகற்றுவித்து — நால்வகையாம்

21. சத்திநி பாதம் தருதற்கு இருவினையும்
ஒத்துவரும் காலம் உளவாகிப் — பெத்த

22. மலபரி பாகம் வருமளவில் பன்னால்
அலமருதல் கண்ணுற்று அருளி — உலவாது

23. அறிவுக்கு அறிவாகி அவ்வறிவுக்கு எட்டா
நெறியில் செறிந்தநிலை நீங்கிப் — பிறியாக்

24. கருணை திருஉருவாய்க் காசினிக்கே தோன்றிக்
குருபரனென்று ஓர்திருப்பேர் கொண்டு — திருநோக்கால்

25. ஊழ்வினையைப் போக்கி உடலறுபத் தெட்டுநிலம்
ஏழும் அத்துவாக்கள் இருமூன்றும் — பாழாக

26. ஆணவமான படலம் கிழித்து அறிவில்
காணரிய மெய்ஞ்ஞானக் கண்காட்டிப் — பூணும்

27. அடி ஞானத் தாற்பொருளும் ஆன்மாவும் காட்டிக்
கடியார் புவனமுற்றும் காட்டி — முடியாது

28. தேக்குபர மானந்தத் தெள்ளமுதம் ஆகிஎங்கும்
நீக்கமற நின்ற நிலைகாட்டிப் — போக்கும்

29. வரவும் நினைப்பும் மறப்பும் பகலும்
இரவும் கடந்துஉலவா இன்பம் — மருவுவித்துக்

30. கன்மமலத் தார்க்குமலர்க் கண்மூன்றும் தாழ்சடையும்
வன்மழுவும் மானுமுடன் மால்விடைமேல் — மின்னிடந்துப்

31. பூத்த பவளப் பொருப்புஒன்று வெள்ளிவெற்பில்
வாய்த்ததனைய தெய்வ வடிவாகி — மூத்த

32. கருமமலக் கட்டறுத்துக் கண்ணருள் செய்து உன்நின்று
ஒருமலத்தார்க்கு இன்பம் உதவிப் — பெருகியெழு

33. மூன்றவத்தை யும்கழற்றி மூத்தருட னேஇருத்தி
ஈன்றபர முத்தி அடைவித்துத் — தோன்றவரும்

34. யானெனதென்று அற்ற இடமே திருவடியா
மோனபரா னந்தம் முடியாக — ஞானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35. திருஉருவா இச்சை செயறறிவு கண்ணா
அருளதுவே செங்கை அலரா — இருநிலமே

36. சந்நிதியா நிற்கும் தனிச்சுடரே எவ்வுயிர்க்கும்
பின்னமற நின்ற பெருமானே — மின்னுருவம்

37. தோய்ந்த நவரத்நச் சுடர்மணியால் செய்த பைம்பொன்
வாய்ந்த கிரண மணிமுடியும் — தேய்ந்தபிறைத்

38. துண்டம்இரு மூன்றுநிரை தோன்றப் பதித்தனைய
குண்டரம் பூத்தநுதல் பொட்டழகும் — விண்ட

39. பருவமலர்ப் புண்டரிகம் பன்னிரண்டு பூத்தாங்கு
அருள்பொழியும் கண்மலர் ஈராறும் — பருதி

40. பலவும் எழுந்துசுடர் பாலித்தாற் போலக்
குலவு மகரக் குழையும் — நிலவுமிழும்

41. புன்முறுவல் பூத்தலர்ந்த பூங்குமுதச் செவ்வாயும்
சென்மவிடாய் தீர்க்கும் திருமொழியும் — வின்மலிதோள்

42. வெவ்வசுரர் போற்றிசைக்கும் வெஞ்சூர னைத்தடிந்து
தெவ்வருயிர் சிந்தும் திருமுகமும் — எவ்வுயிர்க்கும்

43. ஊழ்வினையை மாற்றி உலவாத பேரின்ப
வாழ்வுதரும் செய்ய மலர்முகமும் — சூழ்வோர்

44. வடிக்கும் பழமறைகள் ஆகமங்கள் யாவும்
முடிக்கும் கமல முகமும் — விடுத்தகலாப்

45. பாச இருள்துரந்து பல்கதிரில் சோதிவிடும்
வாச மலர்வதன மண்டலமும் — நேசமுடன்

46. போகமுறும் வள்ளிக்கும் புத்தேளிர் பூங்கொடிக்கும்
மோகம் அளிக்கும் முகமதியும் — தாகமுடன்

47. வந்தடியில் சேர்ந்தோர் மகிழ வரம்பலவும்
தந்தருளும் தெய்வமுகத் தாமரையும் — கொந்தவிழ்ந்த

48. வேரிக் கடம்பும் விரைக்குரவும் பூத்தலர்ந்த
பாரப் புயசயிலம் பன்னிரண்டும் — ஆரமுதம்

49. தேவர்க்கு உதவும் திருக்கரமும் சூர்மகளிர்
வேமக் குழைந்தணைந்த மெல்கரமும் — ஓவாது

50. மாரி பொழிந்த மலர்க்கரமும் பூந்தொடையல்
சேர அணிந்த திருக்கரமும் — மார்பகத்தில்

51. வைத்த கரதலமும் வாமமருங் கிற்கரமும்
உய்த்த குறங்கில் ஒருகரமும் — மொய்த்த

52. சிறுதொடிசேர் கையும்மணி சேர்ந்ததடங் கையும்
கறுவுசமர் அங்குசம்சேர் கையும் — தெறுபோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

53. அதிர்கே டகம்சுழற்றும் அங்கைத் தலமும்
கதிர்வாள் விதிர்க்கும் கரமும் — முதிராத

54. கும்பமுலைச் செவ்வாய்க் கொடியிடையார் வேட்டணைந்த
அம்பொன் மணிப்பூண் அகன்மார்பும் — பைம்பொன்

55. புரிநூலும் கண்டிகையும் பூம்பட்டுடையும்
அரைஞாணும் கச்சை அழகும் — திருவரையும்

56. நாதக் கழலும் நகுமணிப்பொற் கிண்கிணியும்
பாதத்து அணிந்த பரிபுரமும் — சோதி

57. இளம்பருதி நூறா யிரங்கோடி போல
வளந்தரு தெய்வீக வடிவும் — உளந்தனில்கண்டு

58. ஆதரிப்போர்க்கு ஆருயிராய் அன்பரகத் தாமரையின்
மீதிருக்கும் தெய்வ விளக்கொளியே — ஓதியஐந்து

59. ஓங்காரத்து உள்ளொளிக்கும் உள்ளொளியாய் ஐந்தொழிற்கும்
நீங்காத பேருருவாய் நின்றோனே — தாங்கரிய

60. மந்திரமே சோரியா வான்பதமே மாமுடியாத்
தொந்தமுறும் வன்னமே தொக்காகப் — பந்தனையால்

61. ஒத்த புவனத் துருவே உரோமமாத்
தத்துவங்க ளேசத்த தாதுவா - வைத்த

62. கலையே அவபவமாக் காட்டும்அத்து வாவின்
நிலையே வடிவமா நின்றோய் — பலகோடி

63. அண்டம் உருவாகி அங்கம் சராசரமாய்க்
கண்டசக்தி மூன்றுட் கரணமாய்த் — தொண்டுபடும்

64. ஆவிப் புலனுக்கு அறிவு அளிப்ப ஐந்தொழிலும்
ஏவித் தனிநடத்தும் எங்கோவே — மேவ

65. வரும்அட்ட மூர்த்தமாம் வாழ்வேமெய்ஞ் ஞானம்
தரும்அட்டயோகத் தவமே — பருவத்து

66. அகலாத பேரன்பு அடைந்தோர் அகத்துள்
புகலாகும் இன்பப் பொருப்பும் — சுகலளித்த

67. பேரின்ப வெள்ளப் பெருக்காறும் மீதானம்
தேரின்ப நல்கும் திருநாடும் — பாரின்பம்

68. எல்லாம் கடந்த இருநிலத்துள் போக்குவரவு
அல்லாது உயர்ந்த அணிநகரும் — தொல்லுலகில்

69. ஈறும் முதலுமகன்று எங்குநிறைந்த ஐந்தெழுத்தைக்
கூறி நடாத்தும் குரகதமும் - ஏறுமதம்

70. தேர்ந்து களித்தோர் துதிக்கையினால் பஞ்சமலம்
காய்ந்த சிவஞானக் கடாக்களிறும் — வாய்ந்தசிவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

71. பூரணத்துள் பூரணமாம் போதம் புதுமலரா
நாரகத்துள் கட்டு நறுந்தொடையும் — காரணத்துள்
72. ஐந்தொழிலும் ஓவாது அளித்துயர்த்த வான்கொடியும்
வத்தநவ நாத மணிமுரசும் — சந்ததமும்
73. வீசும் பனுவல் விபுதர் தனித்தனியே
பேசும் தசாங்கமெனப் பெற்றோனே — தேசுதிகழ்
74. வெந்தகுவர்க்கு ஆற்றாத விண்ணோர் முறைக்கிரங்கி
ஐந்து முகத்தோடு அதோமுகமும் — தந்து
75. பூங்கயிலை வெற்பில் புனைமலர்ப்பூங் கோதையிடப்
பாங்குறையும் முக்கண் பரஞ்சோதி — ஆங்கொருநாள்
76. திருமுகங்கள் ஆறாகிச் செந்தழற்கண் ஆறும்
ஒருமுகமாய்த் தீப்பொறியாறு உய்ப்ப — விரிபுவனம்
77. எங்கும் பரக்க இமையோர் கண்டு அஞ்சுதலும்
பொங்கும் தழல்பிழம்பைப் பொற்கரத்தால் — அங்கண்
78. எடுத்தமைத்து வாயுவைக்கொண்டு ஏகுதியென்று எம்மான்
கொடுத்தளிப்ப மெல்லக் கொடுபோய் — அடுத்ததொரு
79. பூதத் தலைவரொடு போதியெனத் தீக்கடவுள்
சீதப் பகீரதிக்கே சென்றுய்ப்பப் — போதொருசற்று
80. அன்னவளும் கொண்டமைதற்கு ஆற்றாள் சரவணத்தில்
சென்னியில் கொண்டு உய்ப்பத் திருவுருவாய் — முன்னர்
81. அறுமீன் முலையுண்டு அழுதுவிளை யாடி
நறுநீர் முடிக்கணிந்த நாதன் — குறுமுறுவல்
82. கன்னியொடும் சென்று அவட்குக் காதலுருக் காட்டுதலும்
அன்னவள்கண்டு அவ்வுருவம் ஆறினையும் — தன்னிரண்டு
83. கையால் எடுத்தணைத்துக் கந்தனெனப் பேர்புனைந்து
மெய்யாறும் ஒன்றாக மேவுவித்துச் — செய்ய
84. முகத்தில் அணைத்துஉச்சி மோந்து முலைப்பால்
அகத்துள் மகிழ்பூத்து அளித்துச் — சகத்தளந்த
85. வெள்ளை விடைமேல் விமலன் கரத்தில் அளித்து
உள்ளம் உவப்ப உயர்ந்தோனே — கிள்ளைமொழி
86. மங்கை சிலம்பின் மணிஒன்ப தில்தோன்றும்
துங்க மடவர் துயர்தீந்து — தங்கள்
87. விருப்பால் அளித்தநவ வீரருக்குள் முன்னோன்
மருப்பாயும் தார்வீர வாகு — நெருப்பிலுதித்து
88. அங்கண் புவனம் அனைத்தும் அழித்துலவும்
செங்கண் கிடாஅதனைச் சென்றுகொணர்ந்து — எங்கோன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

89. விடுக்குதி என்று உய்ப்ப அதன் மீதிவர்ந்து எண்திக்கும்
நடத்தி விளையாடும் நாதா — படைப்போன்

90. அகந்தை உரைப்பமறை ஆதி எழுத்தென்று
உகந்த பிரணவத்தின் உண்மை — புகன்றிலையால்

91. சிட்டித் தொழிலதனைச் செய்வதெங்ஙன் என்று முனம்
குட்டிச் சிறையிருத்தும் கோமானே — மட்டவிழும்

92. பொன்னம் கடுக்கைப் புரிசடையோன் போற்றிசைப்ப
முன்னம் பிரமம் மொழிந்தோனே — கொன்னெடுவேல்

93. தாரகனும் மாயத் தடங்கிரியும் தூளாக
விரவடி வேல விடுததோனே — சீரலைவாய்த்

94. தெள்ளு திரை கொழிக்கும் செந்தூரில் போய்க்கருணை
வெள்ளம் எனத்தவிசின் வீற்றுருந்து — வெள்ளைக்

95. கயேந்திரனுக்கு அஞ்சல் அளித்துக் கடல்சூழ்
மயேந்திரத்தில் புக்கு இமயோர் வாழச் — சயேந்திரனாம்

96. சூரனைச் சோதித்துவரு கென்றுதடம் தோள்விசய
வீரனைத் தூதா விடுத்தோனே — காரவுணன்

97. வானவரை விட்டு வணங்காமை யால்கொடிய
தானவர்கள் நாற்படையும் சங்கரித்துப் — பானு

98. பகைவன் முதலாய பாவருடன் சிங்க
முகனைவென்று வாகை முடித்தோய் — சகமுடுத்த

99. வாரிதனில் புதிய மாவாய்க் கிடந்தநெடும்
சூருடலம் கீண்ட சுடர் வேலோய் — போரவுணன்

100. அங்கம்இரு கூறாய் அடன்மயிலும் சேவலுமாய்த்
துங்கமுடன் ஆர்த்தெழுந்து தோன்றுதலும் — அங்கவற்றுள்

101. சீறும்அர வைப்பொருத சித்ரமயில் வாகனமா
ஏறி நடாத்தும் இளையோனே — மாறிவரு

102. சேவல் பகையைத் திறல்சேர் பதாகைஎன
மேவத் தனித்துயர்த்த மேலோனே — மூவர்

103. குறைமுடித்து விண்ணம் குடியேற்றித் தேவர்
சிறைவிடுத்து ஆட்கொண்ட தேவே — மறைமுடிவாம்

104. சைவக்கொழுந்தே தவக்கடலே வானுதவும்
தெய்வக் களிற்றை மணம்செய்தோனே — பொய்விரவு

105. காமம் முனிந்த கலைமுனிவன் கண்ணருளால்
வாமமட மானின் வயிற்றுதித்துப் — பூமருவு

106 கானக் குறவர் களிகூரப் பூங்குயில்போல்
ஏனற் புனங்காத்து இனிதிருந்து — மேன்மைபெறப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

107. தெள்ளித் தினைமாவும் தேனும் பரிந்தளித்த
வள்ளிக் கொடியை மணந்தோனே — உள்ளம்உவந்து

108. ஆறுதிருப் பதிகண்டு ஆறெழுத்தும் அன்பினுடன்
கூறும் அவர் சிந்தைகுடி கொண்டோனே — நாறுமலர்க்

109. கந்திப் பொதும்பர்எழு காரலைக்கும் சீரலைவாய்ச்
செந்திப் பதிபுரக்கும் செவ்வேளே — சந்ததமும்

110. பல்கோடி சன்மப் பகையும் அவமிருத்தும்
பல்கோடி விக்கினமும் பல்பிணியும் — பல்கோடி

111. பாதகமும் செய்வினையும் பாம்பும் பசாசும்அடல்
பூதமும்தீ நீரும் பொருபடையும் — தீது அகலா

112. வெவ்விடமும் துட்ட மிருகமுதலாம் எவையும்
எவ்விடம்வந்து எம்மை எதிர்த்தாலும் — அவ்விடத்தில்

113. பச்சைமயில் வாகனமும் பன்னிரண்டு திண்தோளும்
அச்சம் அகற்றும் அயில்வேலும் — கச்சைத்

114. திருவரையும் சீறடியும் செங்கையும் ஈராறு
அருள்விழியும் மாமுகங்கள் ஆறும் — விரிகிரணம்

115. சிந்தப் புனைந்த திருமுடிகள் ஓராறும்
எந்தத் திசையும் எதிர்தோன்ற — வந்திடுக்கண்

116. எல்லாம் பொடிபடுத்தி எவ்வரமும் தந்துபுகுந்து
உல்லாசமாக உளத்திருந்து - பல்விதமாம்

117. ஆசுமுதல் நாற்கவியும் அட்டாவ தானமும்சீர்ப்
பேசும் இயல் பல்காப் பியத் தொகையும் — ஓசை

118. எழுத்துமுத லாம்ஐந்து இலக்கணமும் தோய்ந்து
பழுத்த தமிழ்ப்புலமை பாலித்து — ஒழுக்கமுடன்

119. இம்மைப்பிறப்பில் இருவா தனை அகற்றி
மும்மைப் பெருமலங்கள் மோசித்துப் - தம்மைவிடுத்து

120. ஆயும் பழைய அடியா ருடன்கூட்டித்
தோயும் பரபோகம் துய்ப்பித்துச் — சேய

121. கடியேற்கும் பூங்கமலக் கால்காட்டி ஆட்கொண்டு
அடியேற்கு முன்னின்று அருள்.

*திருச்செந்தூர் கந்தர் கலிவெண்பா முற்றிற்று.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

சிகர வடவரை குனிய நிமிர்தரு
செருவி லொருபொரு வில்லெனக் கோட்டினர்
செடிகொள் பறிதலை யமண ரெதிரெதிர்
செலவொர் மதலைசொல் வையயிற் கூட்டினர்
திருவு மிமையவர் தருவு மரவொலி
செயவ லவர்கொள நல்குகைத் திட்டினர்
சிறிய வெனதுபுன் மொழியும் வடிதமிழ்
தெரியு மவர்முது சொல்லெனச் சூட்டினர்
பகரு மிசைதிசை பரவ விருவர்கள்
பயிலு மியநெறி வெள்வளைத் தோட்டினர்
பசிய வறுகொடு வெளிய நிலவிரி
பவள வனமடர் பல்சடைக் காட்டினர்
பதும முதல்வனு மெழுத வரியதொர்
பனுவ லெழுதிய வைதிகப் பாட்டினர்
பரசு மிரசத சபையி னடமிடு
பரத பதயுக முள்ளம்வைத் தேத்துதும்.

முகமதி யூடெழு நகைநில வாட
முடிச்சூ ழியமாட
முரிபுரு வக்கொடி நுதலிடு சுட்டி
முரிப்பொ டசைந்தாட
இகல்விழி மகரமு மம்மக ரம்பொரும்
இருமக ரமுமாட
இடுநூ புரவடி பெயரக் கிண்கி
ணெனுங்கிண் கிணியாடத்
துகிலொடு சோர்தரு கொடிநுண் மருங்குல்
துவண்டு துவண்டாடத்
தொந்தி சரிந்திட வுந்தி கரந்தொளிர்
சூலுடை யாலடைமற்
றகில சராசர நிகிலமொ டாடிட
ஆடுக செங்கீரை
அவனி தழைந்திட மவலி புனைந்தவள்
ஆடுக செங்கீரை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதுசொற் புலவர்தெ ளித்தப சுந்தமிழ்
நூல்பாழ் போகாமே
முளரிக் கடவுள்ப டைத்தவ சுந்தரை
கிழ்மே லாகாமே
அதிரப் பொருதுக லிப்பகை குன்றமிழ்
நீர்தா டாளாமே
அகிலத் துயிர்கள யர்த்தும றங்கடை
நீணீர் தோயாமே
சிதைவற் றரசிய னற்றரு மங்குடி
போய்மாய் வாகாமே
செழியர்க் கபயரு மொப்பென நின்றுண
ராதா ரோதாமே
மதுரைப் பதிதழை யத்தழை யுங்கொடி
தாலோ தாலேலோ
மலயத் துவன்சவ ளர்த்தப சுங்கிளி
தாலோ தாலேலோ.

செழுமறை தெளியவ டித்தத மிழ்ப்பதி கத்தோடே
திருவரு ளமுதுகு ழைத்துவி டுத்தமு லைப்பாலர்ற்
கழுமல மதலைவ யிற்றைநி ரப்பிம யிற்சேயைக்
களிறொடும் வளரவ ளர்த்தவ ருட்செவி லித்தாயே
குழலிசை பழகிமு ழுப்பிர கத்திர சத்தோடே
குதிகொளு நறியக னிச்சுவை நெக்கபெ ருக்கேபோல்
மழலையி னமுதுகு சொற்கிளி கொட்டுக சப்பாணி
மதுரையில் வளரும டப்பிடி கொட்டுக சப்பாணி.

காலத் தொடுகற் பனைகடந்த
கருவூ லத்துப் பழம்பாடற்
கலைமாச் செல்வர் தேடிவைத்த
கடவுண் மணியே யுயிரால
வாலத் துணர்வு நீர்பாய்ச்சி
வளர்ப்பார்க் கொளிபூத் தளிபழுத்த
மலர்க்கற் பகமே யெழுதாச்சொல்
மழலை ததும்பு பசுங்குதலைச்
சோலைக் கிளியே யுயிர்த்துணையாம்
தோன்றாத் துணைக்கோர் துணையாகித்
துவாத சாந்தப் பெருவெளியிற்
றுரியங் கடந்த பரநாத
மூலத் தலத்து முளைத்தமுழு
முதலே முத்தந் தருகவே
முக்கட் சுடர்க்கு விருந்திடும்
முலையாய் முத்தந் தருகவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடுக்கும் கடவுட் பழம்பாடற்
றொடையின் பயனே நறைபழுத்த
துறைத்தீந் தமிழி னொழுகுநறுஞ்
சுவையே யகந்தைக் கிழங்கையகழ்ந்
தெடுக்குந் தொழும்ப ருளக்கோயிற்
கேற்றும் விளக்கே வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே யெறிதரங்கம்
உடுக்கும் புவனங் கடந்துநின்ற
ஒருவன் றிருவருள் ளத்திலழ
கொழுக வெழுதிப் பார்த்திருக்கும்
உயிரோ வியமே மதுகரம்வாய்
மடுக்குங் குழற் கேடந்துமிள
வஞ்சிக் கொடியே வருகவே
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே.

குலத்தோடு தெய்வக் குழம்பிழிந் தூற்றிக்
குடித்துச் சுவைத்துமிழ்ந்த
கோதென்று மழல்விடங் கொப்புளிக் கின்றவிரு
கோளினுச் சிட்டமென்றும்
கலைத்தோடு மூடிக் களங்கம் பொதிந்திட்ட
கயரோகி யென்றுமொருநாள்
கண்கொண்டு பார்க்வுங் கடவதன் றெனவும்
கடற்புவி யெயத்திகழவிட்
புலத்தோடு முடுமீன் கணத்தோடு மோடுநின்
போல்வார்க்கு மாபாதகம்
போக்குமித் தலமலது புகலில்லை காணமிசைப்
பொங்குபுனல் கற்பகக்கா
டலைத்தோடு வைகைத் துறைப்படி மடப்பிடியொ
டம்புலீ யாடவாவே
ஆணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க வல்லியுடன்
அம்புலீ யாடவாவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலைபட்ட காந்தட் டளிர்க்கையிற் செம்மணி
குயின்றவம் மனைநித்திலம்
கோத்தவம் மனைமுன் செலப்பின் செலுந்தன்மை
கோனக மனையாட்டிற்பாற்
கலைபட்ட வெண்சுடர்க் கடவுடோய்ந் தேகவது
கண்டுகொண் டேபுழுங்கும்
காய்கதிர்க் கடவுளும் பின்றொடர்வ தேய்ப்க்
கறங்கருவி தூங்கவோங்கும்
மலைபட்ட வாரமும் வயிரமும் பிறவுமா
மாமணித் திரளைவாரி
மறிதிரைக் கையா லெடுத்தெறிய நாற்கோட்டு
மதகளிறு பிளிறியோடும்
அலைபட்ட வைகைத் துறைச்சிறை யனப்பேடை
அம்மானை யாடியருளே
ஆசங் கலந்தொருவர் பாகம் பகுத்தபெண்
அம்மானை யாடியருளே.

இழியும் புனற்றண் டுறைமுன்றில்
இதுவெம் பெருமான் மண்சுமந்த
இடமென் றலர்வெண் கமலப்பெண்
இசைப்பக் கசிந்துள் ளுருகியிரு
விழியுஞ் சிவப்ப வானந்த
வெள்ளம் பொழிந்து நின்றனையால்
மீண்டும் பெருக விடுத்வற்கோர்
வேலை யிடுதன் மிகையன்றே.
பிழியு நறைக்கற் பகமலர்ந்த
பிரச மலர்ப்பூந் துகண்மூழ்கும்
பிறைக்கோட் டயிரா பதங்கூந்தற்
பிடியோ டாடத் தேனருவி
பொழியும் பொழிற்கூ டலிற்பொலிவாய்
புதுநீ ராடி யருளுகவே
பொருநைந் துறைவன் பொற்பாவாய்
புதுநீ ராடி யருளுகவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபதமு மென்குரற் கிண்கிணியு முறையிட்
டிரைத்திடு மரிச் சிலம்பும்
இறுமிறு மருங்கென் றிரங்குமே கலையும்பொன்
எழுதுசெம் பட்டுவீக்கும்
திருவிடையு முடைதார மும்மொரிட் டியாணமும்
செங்கைப் பசுங்கிள்ளையும்
திருமுலைத் தரளவுத் தரியமும் மங்கலத்
திருநாணு மழகொழுகநின்
றருள் பொழியு மதிமுகமு முகமதியி னெடுநில
வரும்புகுறு நகையுஞான
ஆனந்த மாக்கூட்டு குடைந்துகுழை மகரத்தொ
டமராடு மோடரிக்கட்
பொருகயலும் வடிவழகு பூத்தசுந் தரவல்லி
பொன்னூசல் ஸாடியருளே
புழுகுநெய்ச் சொக்கர்திரு வழகினுக் கொத்தகொடி
பொன்னூசல் லாடியருளே.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ்

## காப்புப் பருவம்

### திருமால்

பூமா திருக்கும் பசுங்களபப்
புயபூ தரத்துப் புருகூதன்
போற்றக் ககன வெளிமுகட்டுப்
புத்தேள் பரவப் பொதிகைமலைக்

கோமா முனிக்குத் தமிழுரைத்த
குருதே சிகனைக் குறைகடற்குக்
குடக்கே குடிகொண்டிருந்த செந்நிற்
குமரப் பெருமான் தனைக்காக்க

தேமா மலர்பொற் செழும்பொருட்டுச்
செந்தா மரையில் வீற்றிருக்குந்
தேவைப் படைத்துப் படைக்குமுதல்
சேரப் படைத்துப் படைக்கும்உயிர்

ஆமா றளவுக் களவாகி
அனைத்துந் தழைக்கும் படிகருதி
அளிக்கும் படிக்குத் தனியேசங்
காழி படைத்த பெருமாளே

இந்திர னுஞ்சசி யும்பர வும்படி
யிங்கே வந்தார்காண்
இந்திரை யுங்கர சங்கமு குந்தனும்
இந்தா வந்தார்பார்

அந்தண னுங்கலை மங்கையு நின்சர
ணஞ்சேர் கின்றார்போய்
அண்டரு டன்பல தொண்டர்ப ணிந்தனர்
அஞ்சே லென்றாளாய்

மூந்துத டந்திரை யுந்துவ லம்புரி
மொண்டே கொண்டேக
முன்றில்தொ றுந்தர ளங்கள் உமிழ்ந்திட
முந்தூர் நந்தூருஞ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தில்வ ளம்பதி வந்தரு ளுங்குக
செங்கோ செங்கீரை
தென்றல்ம ணங்கமழ் குன்றுபு ரந்தவ
செங்கோ செங்கீரை

மரகத வடிவம் செங்கதிர் வெயிலால்
வாகாய் வாடாதோ
மதிமுக முழுதுந் தண்துளி தரவே
வார்வேர் சேராதோர்

கரமலர் அணைதந் தின்புறு மடவார்
காணா தேபோமோ
கனமணி குலவுங் குண்டலம் அரைஞா
ணோடே போனால்வார்

பொருமிய முலையுந் தந்திட வுடனே
தாய்மார் தேடாரோ
புரவலர் எவருங் கண்டடி தொழுவார்
போதாய் போதாநீள்

சரவண மருவுந் தண்டமிழ் முருகா
தாலோ தாலேலோ
சதுமறை பரவுஞ் செந்திலை யுடையாய்
தாலோ தாலேலோ

கருதிய தமனிய தணியரை வடமிடு
கட்டுவ டத்தோடுங்
கழலிடு பரிபுரம் ஒலியேழ மணியுமிழ்
கைக்கட கப்பூணும்

இருசுட ரொளிபெற மருவிய தளர்நடை
யிட்டும திப்பாக
எழுமதி புரைதிரு முகமலர் குறுவெயர்
இட்டுவ ரத்தாமஞ்

சொருகிய நறுமலர் முகையவிழ் சிகையிடு
சுட்டிநு தற்றாழத்
தொழுதுனை வழிபடும் அடியவர் இளையவர்
சொற்படி தப்பாமற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருமணி யலையெறி திருநக ரதிபதி
கொட்டுக சப்பாணி
குருபர சரவண பவசிவ மழவிடை
கொட்டுக சப்பாணி

கலைப்பால் குறைத்த பிறைமுடிக்குங்
கடவுள் உடலின் விளைபோகங்
கனலி கரத்தில் அளிக்க அந்தக்
கனலி பொறுக்க மாட்டாமல்

மலைப்பால் விளங்குஞ் சரவணத்தில்
வந்து புகுத ஓராறு
மடவார் வயிறு சூலுளைந்து
மைந்தர் அறுவர்ப் பயந்தெடுப்பக்

கொலைப்பால் விளங்கும் பரசுதரன்
குன்றி லவரைக் கொடுசெல்லக்
கூட்டி அணைத்துச் சேரவொரு
கோலம் ஆக்கிக் கவுரிதிரு

முலைப்பால் குடித்த களிவாயால்
முருகா முத்தம் தருகவே
முத்தஞ் சொரியுங் கடலவைவாய்
முதல்வா முத்தந் தருகவே.

பேரா தரிக்கும் அடியவர் தம்
பிறப்பை ஒழித்துப் பெருவாழ்வும்
பேறுங் கொடுக்க வரும்பிள்ளைப்
பெருமா னென்னும் பேராளா

சேரா நிருதர் குலகலகா
சேவற்கொடியாய் திருச்செந்தூர்த்
தேவா தேவர் சிறைமீட்ட
செல்வா என்றுன் திருமுகத்தைப்

பாரா மகிழ்ந்து முலைத்தாசியார்
பரவிப் புகழ்ந்து விருப்புடனப்
பாவா வாவென் றுனைப்போற்றப்
பரிந்து மகிழ்ந்து வரைவழைத்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரா திருக்க வழக்குண்டோ
வடிவேல் முருகா வருகவே
வளருங் களபக் குரும்பைமுலை
வள்ளி கணவர் வருகவே

## அம்புலிப் பருவம்

கலையால் நிரம்பாத கலையுண் டுனக்கு நிறை
கலையுண் டிவன் தனக்குக்
களங்கமரு குறமான் உனக்குண்டு குறமான்
கருத்துண் டிவன் தனக்குத்

தொலையாத கணமுண் டுனக்குமங் கலகணத்
தொகையுண் டிவன் தனக்குத்
துளியமுத முண்டுனக் கிவனுக்கு மாறாத
சொல்லமுதம் உண்டுனக்குக்

கொலையா டராவழிப் பகையுண்டு கடுவிடங்
கொப்புளிக் குங்கடசெவிக்
கோளர வைக்கொத்தி யெறியுமே காரமிக்
குமரனுக் குண்டுகண்டாய்

அலையாழி சூழ்திருச் செந்தில்வடி வேலனுடன்
அம்புலி ஆடவாவே
அரவின்முடி நெளியமயில் முதுகில்வரு குமரனுடன்
அம்புலி யாடவாவே

## சிறுபறைப் பருவம்

பொருவாகை சூடுமர வக்கொடிக் குருகுலப்
பூபாலர் ஏறும் அந்தப்
பூபால னுன்கிளைய துணைவர் நூற்றுவரும்
பொருபதினெட் டக்குரோணி

ஒருவராய்மை சொற்றபடை வீரருஞ் செருவினில்
உருத்தெழலும் நீதியைவர்
உடனாக நின்றுபற் குனன்மணித் தேரினுக்
குள்ளசா ரதியாகியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருவார்கள் தானையிற் பட்டவர்த் தனர்மதட
வர்த்தனர் அடங்கலும்போய்
மயங்கவொரு நாள்விசைய னுக்குவிசை யம்பெருக
மண்ணேழும் உண்டுமிழ்ந்த

திருவாய் வலம்புரி முழக்குதிரு மால்மருக
சிறுபறை முழக்கியருளே
செருவில்எதிர் பொருநபர நிருதர்குல கலகனே
சிறுபறை முழுக்கியருளே

நெஞ்சு மகிழ வரவழைத்து
நிலவை வருவாய் எனப்புகன்று
நித்தல் உனது பணிவிடையின்
நிலமை குலையேம் நீயறிவாய்

பிஞ்சு மதியின் ஒரு மருப்பும்
பிறங்கும் இருதாட் கடவுட்சுவடு
பிழியுங் கரட மும்மதத்துப்
பெருத்த நால்வாய்த் திருத்தமிகும்

அஞ்சு கரக்குஞ் சரத்துணையே
அடியேம் சிற்றில் அழியேலே
அலைமுத் தெறியும் திருச்செந்தூர்
அரசே சிற்றில் அழியேலே

புலமை வித்தக மயூரவா கனவள்ளி
போகபூ டணசூரன்
சலமொழித்தவ நிசாசரர் குலாந்தக
சடாட்சர காங்கேய

குலவு கொற்றவ குமாரதண் டீரவ
குருபர புருகூதன்
உலக ளித்தவர் செந்தில்வாழ் கந்தனே
உருட்டுக் சிறுதேரே
உரக நாயகன் பஃறலை பெரிடிபட
உருட்டுக சிறுதேரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# நயினை நாகபூஷணியம்மை

# பிள்ளைத்தமிழ்

### விநாயகர் துதி

ஆரணத் தனிமுதலை வாரணத் திருவதன
ஆதியைப் பாதிமதிசூ
டையனிமை யோருக்கு வெய்யகய மாமுகன்
ஆற்றுதுயர் மாற்றுகின்ற
காரணத் தாலுதவு கூரணிக் கோட்டனைக்
கருத்தினி லிருத்துமடியார்
கவலையொடு நலிபிணிகள் நவையெலாம் போக்கிடும்
களிறுதனை அஞ்சலிப்பாம்.
ஏரணத் தாலறியொ ணாதசீர் நாடகனி
டப்பால் மடப்பாவையை
ஏடவிழு மலர்வனச மேடைதனி லுறைமாதர்
இருவரும் மருவிநீங்கா
நாரணற் கிளையபரி பூரணக் களிமயிலை
நாகமொடு பூகமோங்கும்
நயினைவரு நாகம்மை தன்னைத் துதித்திடு!
நற்றமிழ்க் கவிதழையவே.

### நூல்

## காப்புப் பருவம்

### திருமால்

நீங்காது வரிவண்டு ரீங்கார மிடுகின்ற
நீள்துளவ மலர்மாலையும்
நெஞ்சுருகு மடியரிசை கொஞ்சுதமிழ் மாலையம்
நிறையப் புனைந்தபின்னும்
பூங்கோதை தொடையலுக் கேங்கித் தவிக்கின்ற
புயல்வண்ண மாமாயனைப்
பொறியரவ மணைமீதில் அறிதுயில்கொள் தேவனைப்
போற்றித் துதித்துநிற்பாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாங்காது கனிகள்பல தூங்குபூங் கொம்பர்கள்
தண்டனிடும் அடியார்கள்போல்
தாழ்ந்துமண் மேல்விழும் தண்ணறும் சோலைசூழ்
தடமதில் நயினைதனில்வாழ்
வாங்காத விற்சடில னீங்கா திடத்திலுறை
மரகதச் சோதிவீசும்
மயிலிளஞ் சாயல்கூர் அயில்பொரும் போர்க்கயல்
மானைப் புரக்கவென்றே.

நெய்தடவி வாரிச் செறித்திட்ட நீலமணி
நேர்கின்ற கொண்டை யாட
நிலவுமிழு கலைமதியி னொளிர்நித் திலச்சுட்டி
நெற்றியில் வயங்கி யாட
வெய்யகயல் விழிசென்று போராடி மீள்செவி
விளங்கு குழை மகரமாட
வெண்சங்கு வளையுடன் பரியகம் சூடகம்
மென்மலர்க் கையிலாட
ஐயர்திரு மேனியைத் தழுவிக் குழைக்கவென்
றமைந்தமணி மார்பகத்தே
ஆணிமுத் தாரமும் அடியர்பா மாலையும்
அசைந்திசைந் தொலி செய்தாட
செய்யமல ரடிதனிற் கிண்கிணி சிலம்பிடச்
செங்கீரை யாடி யருளே
தெள்ளுதமிழ் நயினைவளர் கிள்ளைமொழி நாகம்மை
செங்கீரை யகடியருளே.

## தாலப் பருவம்

வெள்ளிப் பனிமால் இமயமலை
வேந்தன் தேவி மங்கலஞ்சேர்
மேனைகுறங்கு வறிதுறங்க
விட்டுநீங்கிக் கயிலாய
வள்ளல் தன்னை யடையு நசை
மனதிற் கொண்டே அஞ்செழுத்தை
வாயோ தியிடத் தவயோக
மௌன விரதம் பூண்டிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிள்ளை வண்ணத் திருமேனி
கிளரும் வெயிலால் வாடாதோ
கீத மிசைத்துத் துயில் கொள்ளக்
கெஞ்சி நின்றார் மலர்மகளிர்
வெள்ளக் கருணை பொழியமுத
விழியாய் தாலோ தாலேலோ
விதிசெல் நெறிமாற் றிடுநயினை
விமலாய் தாலோ தாலேலோ.

முத்தமிழ் வளர்த்தமது ரைப்பதி யிடத்தளிகள்
முரல்வேப் பலர்த் தாருடன்
முத்தார முறழ்மார்பு மலையப் பொருப்பனது
முன்னைத் தவத்தினாலே
தத்தைமொழி பயில்குழவி யாயவத ரித்துத்
தடாதகைப் பேர்தரித்துச்
சந்ரவட்டச்குடைக் கீழரசு செய்திடும்
தலைமைதாங் கித்தாதவிழ்
கொத்துமலி கொன்றைப் பிரானைநின் கொழுநராய்க்
கொண்டிடு குறிப்பினிற்போர்க்
கோலம்பு னைந்துசௌந் தரமாற னாய்வந்த
குழகருக் கெதிராகவிற்
சக்தியொடு கோட்டிச் சரந்தொட்ட கையினால்
சப்பாணி கொட்டியருளே
சங்கினமு முங்குபழ னங்களுறு நயினைமயில்
சப்பாணி கொட்டியருளே.

## முத்தப் பருவம்

இமய வரசன் மகளாகி
இருக்கும் பருவத் திறையை நினைந்
தியற்றுந் தவத்தி லுணர் வொன்றி
ஏந்தல் பேரை நெஞ்சுருகிச்
சமயா தீதக் கங்கையணி
சடையாய் கொன்றை மலர்த்தாராய்
சந்த்ர சூடா மணியரசே
தவத்தின் பேறே தனிமுதலே
இமையா முக்கட் பரம்பொருளே
என்று பலவா றிசைப்பதயல்
இருந்து மடுத்து மீண்டவற்றை
இயம்பும் கிளிக்கு மகிழ்ச்சியினால்
உமையே முத்த மளித்தகனி
யுகுவாய் முத்தந் தருகவே
உரகம் பரவும் நயினைதனில்
உறைவாய் முத்தந் தருகவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வருகைப் பருவம்

போற்றும் உண்மைத் தொழும்பருளப்
போதில் உறையும் மடவனமே
பொய்யில் புலவர் கவிமழையால்
புளகித் தாடும் இளமயிலே
ஆற்றைப் பிறையைக் கொன்றையினை
அணியும் பெருமான் இடப்பாகம்
அகலாப் பச்சைப் பசுமேனி
அழகு மிளிரும் ஆரமுதே
சேற்றில் புதையும் மதகரி போல்
தீய ஆசைக் கடலிடையே
சிக்கி உய்யும் நெறியின்றித்
திணறும் அடியேன் மனமயக்கம்
மாற்றும் இமய மலைபயந்த
மருந்தே வருக வயல்பொழில்சேர்
வளமார் நயினைப்பதி அமரும்
வாழ்வே வருக வருகவே.

## அம்புலிப் பருவம்

வையகந் தன்னைப் புரந்திடுத லால்கலைகொள்
மாட்சியால் மலையில் வரலால்
மாலைய னாதலால் மீனாட்சி யுடைமையால்
வாய்த்தகற் புரமருவலால்
ஐயநீ அம்பிகையை ஒத்திடு திறத்தினால்
ஆதுரத் தோடழைத்தாள்
அளவுக்கு விஞ்சிவிலை வைக்காமல் விரைவாக
அன்னையுட னாடவந்தால்
துய்யவடியார் தமது மனமாசு போக்கிடும்
தோகைக்கு நின்களங்கத்
தூசைத் துடைத்திடுதல் எளிதாகு மாதலால்
துயர்கெடுத் தாண்டருளுவாள்
வெய்யிலெறி பசுமணித் திருமேனி யம்மையொடு
வெண்மதிய மாடவாவே
மின்னிலங் கும்நயினை மன்னுநா கம்மையொடு
வெண்மதிய மாடவாவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேறு

தோடலர் மல்லிகை மாலை யினம்பல
தோளில சைந்தாடத்
தூவிய னம்மயில் மானின மன்னநின்
தோழியர் கொண்டாட
கோடிரமொன்று சுரும்ப ரெழுந்து
கலைந்து யறந்தோட
கூனலி ளம்பிறை நேர் நுத லம்பொடி
வேர்வை யரும்பாட
கூடல்வ ளம்பதி யாள்கையில் மன்றினிற
யார்வரல் முன்தேரக்
கூடல்பு னைந்திடு பாடல் மெல்லடி
தூளிது தைந்தாட
ஆடகவல்லி மனோன்மணி அம்பிகை
ஆடுக அம்மனையே
ஆர்கலி சூழ்நயி னாபதி வாழ்பரை
ஆடுக அம்மனையே.

வையம் நலிக்கும் கலிதளர
மல்கி யறங்கள் மிகவளர
வாழ்த்தும் கவிஞர் உளம் குளிர
மாறாப் பிணிநோய் முழுதொழிய
வெய்ய சனன விடாய் தணிய
வென்றுன் னடிதஞ் சிரகணிய
விழைந்து வருவார் வினைகழிய
விழிசூலருள் கொண்டுறக்கரிய
மையார் குழற்கார் இடைமின்னல்
மணிமே கலையின் முழக்குநெடு
வாலைச் சிலைவெம் புருவமினைவ
வியங்கக் காட்டி உயிர்வளாக்கப்
பொய்யா தென்றும் கருணைமழை
பொழிவாய் ஊசல் ஆடுகவே
புவன மனைத்தும் தொழுநயினைப்
பொன்னே ரூசல் ஆடுகவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## குலதெய்வம் - பள்ளந் தோட்டத்து வைரவர்

செஞ்செவிய கஞ்சமலர் அயன்மயலும் தேவர்கள்தம் துயரும் தேய்த்த
வெஞ்சினமுத் தலைவேலும் நீலமணிக் கதிர்வீசு மெய்யு மன்பர்
தஞ்சிறுமை தகர்த்தெறியும் அருள் நோக்கும் சார்ந்திலகு வடுகநாதர்
செஞ்சரணம் தஞ்சமென அஞ்சலிப்பார் தமைத்தீமைசார்கிலாவே.

## வடலியடைப்பு விநாயகர் பராவல்

இடைப்பட லின்றி வழிபடு மன்பருக் கின்னருளைத்
தடைப்பட லின்றி வழங்கும் தகவினிற் சார்வடலி
யடைப்பினில் வைகிடும் ஆனை முகசர ணாரவிந்தம்
அடைக்கல மாகக் கருதிவந் தேனையின் றாண்டுகொள்ளே.

தான மலியும் வடலி யடைப்புத் தலத்திலுறை
கூன விளம்பிறை வேணியர் தந்த குடிலைவடி
வான வதனம் வயங்கு விநாயக வள்ளலெந்தன்
ஈன மகற்றிமெய்ஞ் ஞானம் வழங்க இசைந்தருளே.

### காளி

மாலோற் கிளையவள் நீலோற் பலமலர் மேனியள்செவ்
வேலோற் கருளன்னை யாலால முண்ட விகிர்தரிடம்
பாலே யுறைபவள் சூலா யுதப்படை யாலடியார்
மாலே துடைப்பவள் வடலி யடைப்பினில் வாழ்பவளே.

— சிவசிவ

## நுணுவை விநாயகர் பராவல்

முன்னாள் வேத வியாசமகா
முனிவர் செவ்வாய் மலர்ந்த பச்சை
முரளீதரன் தன் மகிமைசெறி
முதுகாப் பியமாம் பாரதத்தை
பொன்னார் கிரியில் எழில் கூரப்
பொறித்தும் கயமா முகத்தரசன்
புரிந்த கொடுமை யாலமரர்
புலம்பல் கண்டே யவன் மார்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னைக் கீண்டு சயம்படைத்தும்
தயங்கு தவள மருப்பாலென்
தருக்கு நெஞ்சக் கனகல்லைத்
தகர்த்துச் சிறுமை பொறுத்துனது
மின்னார் கமலவடி யிலெனை
விளங்க வைக்க வருகவே
வேலிமருதம் சூழ்நுணுவை
விமலா வருக வருகவே.

செறிதேன் கருதி வண்டுதேச்
செவ்வே டவிழு மலர்வாவி
திகழும் நுணுவைப் பதிமேவித்
திருந்து பணிகள் புரியடியார்
உறுமா துயரம் துடைத் தருள்செய்
உளங்கொண் டுறையுந் தலைவாநல்
லுணர்வு தலைப்பட்டவர் தம்மோ
டொன்றி யொழுகும் வகைதெரியா
அறிவிலாமை யெனுங் கொடிய
அந்த காரஞ் சூழ்மனமாம்
அடவிதனிலைம் புலவேடர்
அலைப்ப உலைந்து தடுமாறி
வறிதே யுழலு மெனக் குய்யும்
மார்க்கம் காட்ட வருகவே
வயங்குமோடை மாதங்க
வதனத் தரசே வருகவே.

நன்னூற் படிப்பால் அறிவுயர்வும்
நல்லோர் உறவால் உயர் உணர்வும்
நவில்சொற் றிறம்பா நற்றுணையுந்
நயமார் பிள்ளைக் கனியமுதும்
என்னா யகனே இப்புவியில்
யான்பெற் றுவக்க நல்கிணையால்
இனிமேல் இவற்றின் மேலாமுன்
இருதா மரைப்பா தப்போதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னே ரெந்தன் கல்நெஞ்சம்
கனிந்து களிவண்டாய்ப் பிறவிக்
கட்டை நெகிழ்க்கும் இயல்புடைய
கருணைச் செழுந்தேன் மாந்தியவா(று)
எந்நேரமு முன் நினைவுதனில்
இணைந்து நிற்கும் வரமருள
எழுந்து வருக நுணுவையில் வாழ்
இறைவா வருக வருகவே.

— சிவசிவ

## அத்துளு அன்னைக்கு விண்ணப்பம்

வெள்ளைக் கலையுந்தண் வெண்முத்து மாலையும் வீணையுமாய்
வெள்ளைக் கமலத் துறைகின்ற அத்துளு வேதவல்லீ!
வெள்ளைப் பெடையன மேநின் பதமலர் விண்டலர
வெள்ளை மனத்தடம் தந்தெனை யாளுவை மெல்லியலே.

மெல்லியல் அத்துளு வித்தகி! எந்தன் வினைசிதைக்கும்
சொல்லின் கிழத்தி! துணைப்பத வல்லி! சுகந்தமுறும்
அல்லியந் தாமரை யாட்டி! மறுமை அடுக்கினும்நின்
கல்லுயர் கோயில் கருதிட மேலும் கடைக்கணியே.

— குழஉவிறை

## செல்வச் சந்நிதிச் செவ்வேட்கு முறையீடு

பரக்கும் பிறவிக் காடலைப்பப்
பவஞ்சேர் வினையாம் பேயலைப்பப்
பஞ்சப் புலனாம் களிறலைப்பப்
பாழ்மும் மலவே டுவரலைப்பப்
பிரமன் கிறுக்கும் தலைக்கிறுக்கும்
பேயேன் நெஞ்சத் தனிக்கிறுக்கும்
பெருகும் பாசத் தளைமுறுக்கும்
பிழைபட் டறிய நின்கோயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவும் பகலும் வலம்வந்தே
இருகண் மழையை நிதம்பொழிய
ஏத்தும் மொழியும் குழறிடவென்
இதயம் கனியும் பேறளிப்பாய்
சுரக்கும் கருணை அறுமுகத்தாய்!
தொண்டைத் தலஞ்சேர் சந்நிதியாய்!
துணையாம் குறத்தி குஞ்சரிக்கோர்
துணையே! என்தன் விழுத்துணையே!

திருவார் செல்வச் சந்நிதிக்கே
சிறுதாள் பதிக்கும் செங்கரும்பே!
தேவகுலத்தோர் நெடிதுண்ணும்
தெவிட்டா அமுதப் பெருங்கடலே!
பெருகும் கருணைத் தேன்சுவையே!
பிள்ளைப் பெருமான் எனவந்த
பீடார் ஞானக் குருமணியே!
பேசும் அடியார் மனவிருட்கோர்
மூருகார் காலை இளங்கதிரே!
மூவா முதலே உமைத்தாயார்
முத்தங் கொடுக்கும் முழுமணியே!
முகமா றுடைய முக்கனியே!
கருவாம் பிணிக்கோர் அருமருந்தே!
கருதும் தொழும்பர்க் கிருநிதியே!
கடம்பார் புயத்துக் கற்பகமே!
கடையேன் நின்தாள் அடைக்கலமே.

— குழுஉவிறை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி

எமது குடும்பத்தின் கலங்கரை விளக்கு அணைந்த
போது வைத்தியசாலையில் உதவி புரிந்தோர்,
அவரின் இறுதிச்சடங்கை சிறப்பாக நடாத்து
வதற்கு பலவழிகளில் உதவியோர், அதில்
கலந்து கொண்டோர், இரங்கல்
செய்திகள் அனுப்பிவைத்தோர்,
வதிவிடத்தில் நடைபெற்ற
அஞ்சலிநிகழ்வை ஒழுங்குசெய்தோர்
அதில் அஞ்சலி உரை நிகழ்த்தியோர்,
அதில் கலந்துகொண்டோர் குறிப்பாக கல்வி
உலகத்தோருக்கும், இம்மலரினை உருவாக்க
உதவியோருக்கும், குறுகிய காலத்தில் இம்மலரைப்
பிரசுரித்துத் தந்த மஹாத்மா அச்சகத்தாருக்கும்,
இன்று அந்தியேட்டி சபிண்டிகரண கிரியையில்
பங்குகொண்டு சிறப்பித்த எல்லோருக்கும்
நாம் கடமைப்பாடு உடையவர்கள்.
அனைவருக்கும் எமது மனமார்ந்த
நன்றியைத் தெரிவித்துக்
கொள்கின்றோம்.

*கரவெட்டி கிழக்கு,*
*கரவெட்டி.*

குடும்பத்தினர்

ஏழாலை மஹாத்மா அச்சகம், இந்துமகளிர் ஒழுங்கை, கந்தர்மடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org